தொலைபேசி: 04144-238027 தொலைநகல்: 04144-238145

# அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**(NAAC தரச்சான்று 'A')**

**(தேர்வுத் துறை)**

தேதி: 16/09/2020

## இணையதள வழியாக தேர்வு எழுதும் மாணவர்களுக்கான வழிமுறைகள்

1. தேர்வுகள் **இணையவழி** மூலம் மட்டுமே நடத்தப்படும்.
2. தேர்வு வினாக்கள் தேர்வு தொடங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு மாணவர்களுடைய மின் அஞ்சலுக்கு (Email) அனுப்பப்படும். இதில் ஏதேனும் சிக்கல் ஏற்பட்டால் உரிய **துறைத்தலைவரை அணுகலாம்**.
3. மாணவர்கள் **A4** அளவு தாள்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும், **அதிகபட்சமாக 40 பக்கங்களை** மட்டுமே பயன்படுத்த முடியும்.
4. விடைத்தாளின் **முதல் பக்கத்தில்**, மாணவர்கள் தெளிவாக தங்களுடைய படிப்பு, செமஸ்டர், தாள் எண், தாளின் பெயர், பதிவு எண் போன்ற விவரங்களை எழுத வேண்டும்.
5. விடைத்தாளில் மாணவர்கள் எந்த பக்கத்திலும் **பெயர் மற்றும் வேறு எந்தவிதமான சிறப்பு குறியீடுகளை** எழுதக்கூடாது.
6. ஒவ்வொரு தேர்வு முடிந்தவுடன், மாணவர்கள் விடைத்தாள்களை ஸ்கேன் செய்து (**PDF** அல்லது **JPEG** வடிவில்) எந்த மின் அஞ்சலில் இருந்து கேள்விதாள்களை பெற்றார்களோ அந்த மின் அஞ்சல் முகவரிக்கு தேர்வு முடிந்து **ஒரு மணி நேரத்திற்குள்** அனுப்ப வேண்டும்.
7. மின் அஞ்சலுக்கு விடைத்தாள்களை அனுப்பிய பிறகு, **மாணவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் விடைத் தாள்களில் மாற்றம் செய்யக்கூடாது.** அவ்வாறு செய்யும் பட்சத்தில், அது **தேர்வு முறைகேடாகவே** கருதப்பட்டு அம்மாணவர் மீது பல்கலைக்கழக விதிமுறைக்கு உட்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
8. மேலும், மாணவர்கள் தேர்வு எழுதிய விடைத்தாள்களை மடிக்காமல் பெரிய உறையில் **பாதுகாப்பாக ஒட்டி அவரவர்களுடைய துறைத்தலைவரின் அலுவலக முகவரிக்கு** அன்றே கட்டாயம் இந்திய அஞ்சல் / கூரியர் மூலம் அனுப்பவேண்டும்.